ஞானத்தின் ஒளிச் சுடராய்
வானத்தின் கொடி மின்னலாய்
விழி வழி இதயம் நுழைந்தவரே
வாழ்க வழமுடன் வாழ்த்தி நிற்கின்றோம்

பொற் குடத்திற்கு பொட்டால் அழகா
பொட்டால் பொற் குடத்திற்கு அழகா
பலிப் பீடத்திற்கு ஞானத்தால் அழகா
ஞானத்தால் பலிப் பீடத்திற்கு அழகா
பலி அது தொடங்கிவிட்டால்
மக்கள் கூட்டத்தை முந்திக்கொண்டு
இறை தூதர்களும் வந்திடுவார்களே

கடுகு சிறிதானாலும் காரம் பெரிதன்றோ முதுமொழி
உருவத்தைக் கொண்டு எடை போட முடியாதவர்
மடை திறந்த வெள்ளம்போல் மறை உரை ஊற்றெடுக்க
கதறி அழும் மழழை கூட அமைதியாக செவிகொடுக்கும்

சிற்றுளி கொண்டு வடித்தெடுத்த கற்சிலை போல்
கல்லான இதயத்தை சொற்பத உளிகொண்டு
வரலாற்றுச் சான்றுடன் மறை உரை ஆற்றியதால்
இதயமெனும் பெரும் கடலில் அலையாக மோதுகின்றீர்

அன்றலர்ந்த ரோஜா மேல் தங்கி நின்ற பனித்துளிபோல்
கால மாற்றத்தால் பொழிகின்ற பனித்துளிபோல்
வான் வெளியில் விரிந்து கிடந்த விண்மீன்போல்
தோன்றி மறைகின்ற நிகழ்வுகளை தாங்கிடுமோ (இதயங்கள்)

வைத்தியம் பெறவந்து வைத்தியம் செய்தவரே
ஆற்றிய பணிகலெல்லாம் குறை இன்றி ஆற்றினீரே
தொடர்ந்து பணி ஆற்றுதற்கு துடி துடிக்கும் அடிகளாரே
தாய் மண்ணில் பணி தொடர வாழ்த்துகின்றோம் வாழ்க வாழ்க

மிசிசாகா மக்கள் கனடா